குருகீதை

(இது, பார்வதி தேவியாருக்குச் சிவபெருமான் குருவின் மகிமையை எடுத்துக் கூறியருளுவது)

க. எவனுக்குத் தெய்வத்தினிடத்து மேலான பக்தியிருக்கின்றதோ, தெய்வத்தினிடத்திற்போலக் குருவினிடத்தும் அந்த பக்தி இருக்கின்றதோ, அந்த மகாத்மாவிற்கே னும் சொல்லிய இவ் வர்த்தங்கள் பிரகாசிக்கும்.

உ. குரு எவரோ அவர் சிவனெனப்படுகின்றார். சிவன் எவரோ அவர் குருவெனக் கருதப்படுகின்றார். குரு வேறு சிவன் வேறு என்று எவன் விகற்பத்தைச் செய்கின்றானே, அவ் வரன் மகா சண்டாள னகின்றான்.

ங. அழகிய முகத்தினையுடைய பார்வதி! மூன்று உலகங்களிலும் அடைதற்கரியது யாதோ அதனைச் சொல்லுகின்றேன் கேள். குரு, பிரம்மத்தைவிட அன்னியமில்லை. இது சத்தியம், சத்தியம்.

ச. வேதசாஸ்திர புராணங்களும், இதிகாச முதலியனவும், மந்திர யந்திர வித்தை முதலியனவும், மோகனம் உச்சாடன முதலியனவும், சைவாகமங்கள்

முதலியனவும், மற்றுமுள்ள அனேக (சாங்கியாதி) மதங்களும் குருவுண்மை தெரியாத மயக்க உள்ளத் தினைப் பெற்றுள்ள சகல ஜீவர்களுக்கும் தவறுடை யனவேயாம்.

ரு. பிரியமுள்ளவளே! குருவுண்மையை அறியாத திலல் ஜபம், தபம், விரதம், தீர்த்தம், யாகம், அவ் வாறே தானம் என்பவை யாவும் வியர்த்தமாகின்றன.

கூ. பார்வதி! குருமூலம் பெறும் ஞானத்தைவிட ஆத்மாவிற்குத் தேவையானது வேருென்றில்லை. இது சத்தியம். சத்தியம். அதனைப் பெறுதற் பொருட்டுப் பிரயத்தினம் விவேகிகளால் செய்யத்தக்கதாம்.

எ. உலகமாயை கூடமான அவித்தை என்றும், தேகம் அஞ்ஞானத்தாலாகியது என்றும் அறியும் மேலான ஞானம், எவரது கிருபையால் உண்டா கின்றதோ அவரே குருவென்னும் மைத்தால் அழைக் கப் பெறுகின்றார்.

அ. எவரது பாததாமரைகளிரண்டும் த்வந்த்வ-சுகதுக்காதி இருமைத்தாபத்தை - னிக்குவனவாயும், பவக் (பிறவிக்) கடலைக் கடப்பிப்பனவாயு மிருக்கின்றன வோ, அத்தன்மைய குருவைப் பணிகின்றேன்.

கூ. எக்காரணத்தினல் தேகி சர்வபாவங்களி னின்றும் விசுத்தவடிவனுய்ப் பிரம்மமாவானே, அதனை னைக் குருவாற் கூறுகின்றேன்.

ய. குருவின் பாதோதகத்தைப் பருகி, மிஞ்சி யதைச் சிரசிற் றெளித்துக்கொண்டு, அதனுல் னரன் சகல தீர்த்தங்களிலும் மூழ்கியதன் பயனை யடை கின்றன்.

யக. குருவின் பாதோதகம் செவ்வையாய்ப் பாபச் சேற்றை உலர்த்துவதும், ஞானதேஜஸ்ஸை விளக்கு வதும், சம்சார சமுத்திரத்தைக் கடத்துவதுமாகவும் உள்ளது.

யஉ. அஞ்ஞானமாகிய மூலத்தைக் கெடுப்பதும், பிறப்பிற் கேதுவான கர்மத்தை யொழிப்பதுமாகிய குரு பாதோதகத்தை ஞான வைராக்கியம் பெறுதற் பொருட் டுப் பருகுக.

யங. குருவின் பாதோதகத்தைப் பருகலும், குரு வின் உச்சிஷ்டத்தைப் புசித்தலும், குருவடிவை எப் போதும் தியானித்தலும், குருவின் னமத்தை எப் போதும் ஜபித்தலும் செய்தல்வேண்டும்.

யச. தன் தேசிகரது னமத்தைக் கீர்த்தித்தல் அனந்தராகிய சிவனது கீர்த்தனமே யாகின்றது. தன் தேசிகரது னமத்தைச் சிந்தித்தல் அனந்தராகிய சிவ னது சிந்தனமே யாகின்றது.

யஞ. எவருடைய போதரணுவாகிய ஒன்று ஸம் ஸார ஸமுத்திரத்திற்கு அணைபோலாகின்றதோ அத் தேசிக னுதரை னித்தியம் உபாசிப்போம்.

யசு. எவருடைய அனுக்கிரக மாத்திரத்தினல் சோகமும் மோகமும் ஞசமாகின்றனவோ, அந்த ஸ்ரீ தேசிகேந்திரராகிய பரமாத்மாவிற்கு னமஸ்காரம்.

யஎ. எவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று, அதனல் மகத்தாகிய அக்ஞானம் னீக்கப்படுகின்றதோ அந்த ஸ்ரீ தேசிகேந்திரருக்கு அபீஷ்ட சித்தியின் பொருட்டு னமஸ்காரம்.

யஅ. குரு வசிக்குமிடம் காசி க்ஷேத்திரம். அவரது பாதோதகம் கங்கை. குருவானவர் சாக்ஷாத் விசுவேசுவரன். அவர் வாக்கிலிருந்து வரானின்ற பிரம்ம னிச்சயம் தாரகமாம்.

யக. குருசேவையே கயை யெனப்படும். அவர் தேகம் அங்குள்ள அக்ஷயமான வடவிருக்ஷமாம். அவர் பாதம் (கயையிலுள்ள) விஷ்ணு பாதமாம். அங்குத் தத்தஞ்ஞெய்து கொடுக்கப்பட்ட மனம் வியாபகனிலையடைந்ததாம்.

உய. குருவின் படிவத்தைத் தினமும் ஸ்மரித்தல் வேண்டும். குருவின் னமத்தை எப்போதும் ஜபித்தல் வேண்டும். குருவினுடைய ஆக்ஞையைச் செய்ய வேண்டும். குருவுக்கு அன்னியமானவற்றைப் பாவிக்கலாகாது.

உயக. குருவின் முகத்தில் பிரம்ம மிருக்கின்றது. அது அனுதருளால் அடையப்பெறுகின்றது. ஆகவே,

மறதியில்லா னினைவோடு எப்போதும் குருவைத் தியா னித்தல் வேண்டும்.

உயஉ. தனது (பிரம்மசரியாதி) ஆசிரமம், தனது (பிராமணாதி) ஜாதி, தனது கீர்த்தி, வளம் என்னுமிவ் வெல்லாவற்றையும் முற்றிலும் விட்டுக் குரு வையே செவ்வையாய் ஆசிரயிக்க வேண்டும்.

உயங. குருவை அனன்னியமாய்ச் சிந்திப்பவர்க் குப் பரமானந்தம் எளிதிற் பெறத்தக்கதாம். ஆதலால் எல்லா முயற்சியாலும் குருவின் ஆராதனை செய்க.

உயச. குருவின் வதனத்திலுள்ள வித்தை குருவி னிடத்துச் செய்யும் பக்தியிலைடையப் பெறுகின்றது. மூன்றுலகத்தின்கண்ணுள்ள தேவரிஷி பித்ருக்கள் மானிடரென்போர் இதனைத் தெளிவாய்க் கூறுவோ ராவர்.

உயடு. குகாரம் அந்தகாரமாம். ருகாரம் (அதனை விழுங்கும்) தேஜஸெனப்படுகின்றது. அக்ஞானத்தை விழுங்கும் பிரம்மம் குருவே; சம்சயமில்லை.

உயகூ. குகாரம் இருளாம். ருகாரம் அதனைக் கெடுப்பதாம். அந்தகாரமாகிய இருளைக் கெடுப்பதா யிருத்தலால் குருவெனப்படுகின்றது.

உயஎ. குகாரம் குணாதீதமாம், ருகாரம் ரூபாதீத மாம். குணரூபங்க ளில்லாததா யிருத்தலால் குரு வென்று கூறப்படுகிறது.

உயஅ. குகாரமாகிய முதலெழுத்து மாயாதி குணங்களை விளக்குவதாம். ருகாரமென்னும் இரண்

டாவ தெழுத்து மாயாமயக்கத்தினைக் கெடுக்கும் பர பிரம்மமாம்.

உஎக. இவ்விதத்தால் குருபதம் சிரேஷ்டமாம்; தேவர்களுக்கும் அடைதற்கரியதாம்; ஹாஹா ஹூஹூ வென்னும் கணங்களாகிய கந்தர்வர் முதலியோராலும் பூஜிக்கப்பெற்றதாம்.

உஅ. அவர்களெல்லோருக்கும், நிச்சயமாகக் குருவிற்கு மேலான தத்துவமில்லை. குருவிற்கே ஆராதனஞ் செய்தல் வேண்டும். ஜீவ ஒட்டுதலோடு (எல்லாவற்றையும்) அவருக்கே நிவேதித்தல் வேண்டும்.

உஆக. ஸாதகன் மனமகிழ்ச்சியுடன் குருவிற்கு ஆசனம், படுக்கை, வஸ்திரம், வாகனம், பூஷணம் கொடுத்தல் வேண்டும்.

உஇஉ. குருவின் சன்னிதியில் ணமஸ்கரித்துக் கர்ம (காய)த்தினாலும், மனதினாலும், வாக்கினாலும் குருவை எப்போதும் ஆராதித்தல் வேண்டும்.

உஇக. சரீரத்தையும், இந்திரியத்தையும், பிராணனையும், பொருளையும் தம்மவர் என்னப்பெற்ற பந்துக்களையும், தன் தாரம் முதலிய எல்லாவற்றையும் சற்குருவிற்கு நிவேதித்தல் வேண்டும்.

உஇச. பிரம்மவிஷ்ணுசிவவடிவமாகியவர் குரவன் ஒருவரே. இச் சகமுழுவதும் குரவனினிட மிக மேலான தத்துவமில்லை. ஆதலால் குரவரைச் செவ்வையாய்ப் பூசித்தல் வேண்டும்.

கயடு. சகல வேதங்களின் சிரோரத்தினமாய் விளங்குகின்ற பாதாமரைகளை உடையவராயும், வேதாந்த அர்த்தங்களையெடுத்து னன்முய்ப் போதிப் பவராயு மிருக்கிற குரவனைச் செவ்வையாய்ப் பூசித் தல் வேண்டும்.

கயசு. எவரை னினைத்தமாத்திரத்தால் ஞானம் தானே யுண்டாகுமோ, அத்தகைய குருவே சகல சம் பத்துக்களுமாவர். ஆதலால் குரவனைச் செவ்வையாய்ப் பூசித்தல் வேண்டும்.

கயள. பார்வதி! இந்த மனித தூலம் கிருமி கோடி களால் சூழப்பட்டதும், துர்க்கந்தமுள்ள மலமூத்திரங்க ளுள்ளதும், சிலேட்டுமம், இரத்தம், தோல் மாமிசம் முதலியவற்றுல் கட்டப்பட்டதுமாம். இதில் அபிமானத் தை விட்டுக் குருவைச் சரணகதி யடையவேண்டுமென் பது பொருள்.

கயஅ. சம்சார விருக்ஷத்தில் ஏறியவர்கள் னரக மாகிய சமுத்திரத்தில் விழுகின்றூர்கள். அவர்களெல் லோரையும் எவர் கரையேற்றுகின்றூரோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கயக. குரவனே பிரம்மா, குரவனே விஷ்ணு, குர வனே மகேசுவரனகிய தேவனும், குரவனே ஏகமாகிய பரப்ரம்மமாம். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சய. அக்ஞானமென்னும் திமிரத்தால் குருடா யுள்ளவனது கண், ஞானமென்னும் அஞ்ஞன சலாகை

யினல் எவரால் திறக்கப்பட்டதோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சயக. அகண்ட மண்டலாகாரமான சராசரம் எத னல் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ அந்நத் தத்பதம் எவராற் காட்டப்பட்டதோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சயஉ. ஸ்தாவரஜங்கமமான இச்சராசரம் எதனல் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்நத் துவம்பதம் எவ ராற் காட்டப்பட்டதோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சயங. சராசரத்தோடு கூடிய மூன்றுலகமாகிய யாவும் சின்மயத்தினல் வியாபிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அஸித்வம் எவரால் காட்டப்பட்டதோ, அத் தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சயச. எவரது பக்கியத்தினல் னிமிஷத்தில் அல்லது னிமிஷத்தினது பாதியில் தனது ஆத்மாவாகிய சிவத்தினை யறிந்து (புருஷன்) விமுக்தனவனே, அத் தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சயடு. சாசுவதமும், சாந்நமும், ஆகாயத்திற் கப்பாற்பட்டதும், னிரஞ்ஞனமும், னித பிந்து கலைகளுக் கப்பாற்பட்ட சைதன்யமுமாக விளங்கும் அந்த ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சயசூ. எதனல் ஸ்தாவர ஜங்கமமான ஜகத்து யாவும் வியாபிக்கப்பட் டிருக்கின்றனவோ, அது னிர்க்

குணமும் நிர்மலமும் சாந்நமுமான பிரம்மமாம். அப் படிப்பட்ட பிரம்மவடிவ ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்.

சுஎ. பிதா அவர், என் மாதா அவர், பந்து அவர், தெய்வமும் அவரே என நின்று என் ஸம்ஸார மோகத்திஹைக் கெடுக்கும் அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்.

சுஅ. எதன் இருப்பினல் ஜகத்து உளதாகின் றதோ, எதன் விளக்கத்தால் அது விளங்குகின்றதோ, எதன் ஆனந்தத்தால் எல்லாம் ஆனந்திக்கின்றனவோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்.

சுஆ. எதன்கண் இவை எல்லாம் நிலைத்திருக் கின்றனவோ, எதன் விளக்க வடிவத்தால் இவை யாவும் விளங்குகின்றனவோ, எதன் பிரியத்தால் புத்திரன் முதலியோர் பிரியமா யிருக்கின்றனரோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்.

சுஇ. எவரால் இந்நச் சித்தமும், சங்கற்பிக்கப் படுவது முதலியதுமான தத்துவமும், அவ்வாறே ஜாக் கிரம், சொப்பனம், சுழுத்தி முதலியனவும் காட்டப்பெற்ற தோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு நமஸ்காரம்.

சுஈ. எதன் ஞானம் இவ்வெல்லாமு மாமோ, வேறுபட்ட பேதத்தால் (பேதம் நீங்கியதனல்) திருசிய மன்ரோ, அந்த எல்றும் ஏகரூப வடிவினராகிய ஸ்ரீ குரு விற்கு நமஸ்காரம்.

சுஉ. எவருக்கு அறியப்பட்டது அவனுக்கு இஷ்டமுள்ளதாமோ, எவருக்கு இஷ்டமற்றது அவன்

அறிகிறதில்லையோ, அத்தன்மைய அன்னிய இருப்பு இல்லாதிருக்கும் ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

ருயஉ. எது ஒன்றும் காரணரூபமா யிருப்பதற்கு யாது காரியவடிவமாய் விளங்குகின்றதோ, அத்தன்மைய காரிய காரண வடிவமான ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

ருயச. னை வடிவமான இவ்வுலகு எதைவிட எவ்விதத்தாலும் வேறுகாதோ, அத்தன்மைய காரிய காரண வடிவமான ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

ருயடு. ஞானசக்தி சமாரூடராய், அதாவது சிற்சத்தியோடு செவ்வையாய்ப் பொருந்தியவராய்த் தத்துவ மாலையினல் அலங்கரிக்கப்பெற்றவராய், தம்மை யடைந்தவருக்குப் புத்தி முக்திகளைத் தருபவருமாய் விளங்கும் அந்த ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

ருயரு. ஞானக்கினியின் பிரபாவத்தால் சிஷ்யர்களின் அனேக ஜன்மங்களி லடையப்பட்ட கர்ம பந்தங்களைத் தகிப்பவராகிய அந்த ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்

ருயள. பஞ்சமுத்திரத்தை வற்றச்செய்வதும், க்ஷீரமான சம்பத்தைக் கெடுப்பதும் எவரது பாதத்தின் உதகமாமோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

ருயஅ. குரவனினும் மேலான தத்துவமில்லை. குரவனைவிட மேலான ஞானமில்லை. (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

ரூயக. எனது ஞதன் ஸ்ரீ ஜகன்ஞதனும். எனது குரு ஸ்ரீ ஜகத்குருவாம். எனது ஆத்மாவே சகல பூதங்களின் ஆத்மாவாம். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கூய. குரு ஆதியும் அனதியு மாவர். குரு மேலான தெய்வமாவார். குருமந்திரத்துக்குச் சமானமானதில்லை. (ஆதலால்) அந்த ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கூயக. ஆபத்து னேர்ந்த காலத்துக்குச் சகல தர்ம வடிவமான் குரு ஒருவரே மேலான பந்துவாவர். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கூயஉ. குருவின் னடுவில் விசுவமிருக்கின்றது. விசுவத்தின் னடுவில் குருவிருக்கின்றார். குருவே சகல ஜகத்துமாவர். அவரைத் தவிர வேறில்லை. (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கூயங. பவமென்னும் காட்டிற் புகுந்து, திசை மயக்க மென்னும் மோகத்தை யடைந்த சித்தமுள்ளவனுக்கு எவரால் வழிகாட்டப்பெற்றதோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கூயச. புவியில் தாபத்ரய மென்னும் அக்னியால் தகிக்கப்பட்ட சாந்தமின்றிய பிராணிகளுக்குக் குருவே மேலான கங்கையாவர். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

கூயடு. அஞ்ஞானமென்னும் பாம்பிலல் விழுங்கப் பட்டவர்கள் ஜீவர்கள். அவர்களுக்குச் சிகிச்சை செய்

பவரே வித்தியா சொரூபராகிய பகவானுவார். (ஆத லால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.

சுஎசு. ஜகத்திற்கு ஹேதுவாகியும், ஸப்ஸார சமுத்திரத்துக்குச் சேதுவா(அணையா)கியும், சகல வித்தைகளுக்கும் பிறப்பிடமாயு முள்ள சம்புவான குரு விற்கு னமஸ்காரம்.

சுஎள. தியானத்திற்கு மூலம் குருவடிவம். பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள். மந்திரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம். முத்திக்கு மூலம் குருவின் கிருபை.

சுஎஅ. ஸப்தஸாகர பரியந்தமுள்ள தீர்த்தங் களின் ஸ்னானத்தா லுண்டாகும் பயன் யாதோ, அது குருவினது பாதோதகத் துளியின் ஆயிரத்தொரு கூறி னில் உண்டாகின்றது.

சுஎக. சிவன் கோபித்த காலத்தில் குரு இரக்ஷிப் பவ ராகின்ரூர். குரு கோபித்த காலத்தில் இரக்ஷிப்பவ ரொருவருமில்லை. ஆதலால் சிவகுருவை யடைந்து அவரை யே செவ்வையாக ஆசிரயிக்கவேண்டும்.

எஎ. வாக்கு மனதுகளுக்கு அதிதகோசரராயும், வெண்மை செம்மைப் பிரபைகளுக்கு அபின்னமாயும், சிவசக்தி சொரூபமாயும், மேலானதாயுமுள்ள குருவின் திருவடிக ளிரண்டினையும் னமஸ்கரிக்கிறேன்.

எஎக. ககாரம் குணாதீதமும், ருகாரம் ரூபனீங்கி யதுமாம். குணாதீதத்தினையும் அருவத்தினையும் எவர் தருகின்ரூரோ, அவரே குருவெனப்படுகின்ரூர்.

எஉ. பிரியமுள்ள பார்வதி! எவர் மூன்று னேத்திர மின்றிய சாக்ஷாத் சிவமாயும், இரண்டு புஜங்களையுடைய விஷ்ணுவாயும், னின்று முகங்களின்றிய பிரம்மாவாயும் இருக்கின்ருரோ, அவரே ஸ்ரீ குருவெனப்படுகின்ருர்.

எஊ. எவருடைய அனுக்கிரஹத்தால் ஜீவர்கள் விசித்தமான சம்சாரத்தினின்றும் மோக்ஷத்தை அடைகின்ருர்களோ, அவரது கிருபை கடாக்ஷித்தற் பொருட்டு என்னால் இவ்வஞ்ஞலி செய்யப்பெறுகின்றது.

எஎ. சற்குருவின் மேலான வடிவத்தினை விவேகக் கண்ணுடையோர் னேரிற் காண்பர். மந்தபாக்கியமுடையவர்கள், குருடர் சூர்யோதயத்தைக் காணுதது போற் காணுர்.

எஏ. சர்வகுலங்களுக்கும் குலக்கோடிகளுக்கும் ஆங்கு அந்த க்ஷணமே தாரகமாய் விளங்கி னிற்கின்ருர்; ஆதலால் அச் சற்குருவை அறிந்து மூன்று காலமும் வந்திக்கவேண்டும்.

எஐ. சற்குரு ஞதரின் சரணங்களிரண்டும் எத்திக்கில் விளங்குகின்றனவோ, அத்திக்கில் – பிரியையே! னேடோறும் அன்போடு னமஸ்கரித்தல் வேண்டும்.

எஒ. சாஷ்டாங்க னமஸ்காரத்தால் குருவைத் தினமும் துதித்துப் பஜிக்கவேண்டும். அவ்வாறு பஜித்தலால் சிடன் ஞான ஸ்திரத்தன்மையை யடைகின்ருன். சுவசொரூபமய னகின்ருன்.

எஒஅ. புஜங்களாலும், பாதங்களாலும், முழந்நாட்களாலும், மார்பினாலும், சிரத்தாலும், கண்ணாலும்,

மனத்தாலும், வாக்காலும் வணங்குதல் அஷ்டாங்க மெனப்படும்.

எஃக. எங்கே பகவான் குருசக்ரவர்த்தி வடிவில் தோன்றி விசுவத்தின் ஸ்திதி பிரளய முடகத்திற்கு னித்திய சாக்ஷியாய் ஜாக்கிரமுள்ளவராய் விளங்கிக் கின்றாரோ, அத்திசையை நோக்கி மலர்ந்த மதுரமான புஷ்பங்களால் னித்தியமும் இடையீடின்றி இவ்வஞ்ஞலி செய்யப்பெறுவதாக.

அஙி. துஷ்கரமும், வியாதியைத் தருவனவும், னெடுங்காலம் அப்பியசித்தும் மலம் நீங்க ஏது வில்லாததும், துக்க சொரூபமும், ஜயித்தற் கரியனவுமாகிய னூற்றுக்கணக்கான பிராணயாமங்களாலும், அனேக கரணங்களாலும் யாது பயன்? எது உதயமாயின் வலியுள்ள வாயு தானே னசிக்குமோ அதனை அக்கணத்திலேயே அடைய-னசிக்கு வெளியே மூச்சு ஓடா சகஜ சுபாவமுள்ளவராய்த் தனித்து ஒப்பற்று விளங்கும் குருவை அனுதினமும் சேவிக்கவேண்டும்.

அஙக. ஞானமே இல்லாத்வர்களுக்கும் முத்திபதம் குருபக்தியினை லடையப்பெறுகின்றது. ஞானம் பெற விரும்புவோருக்குக் குரவனுக்குச் சமானமான சாதனம் வேறில்லை.

அஙஉ. வேதமானது இப்படியன்று, இப்படியன்று என்னும் வாக்கியத்தால் கோஷித்து, முடிவில் எதனின் மேலானது ஒன்று இல்லை யெனக் கூறுகின்றதோ, அத்தன்மைய சத்தியமான குருவை மனதினாலும் வாக்கினாலும் ஆராதித்தல் வேண்டும்.

அடுத்து. குருவின் கிருபையாகிய பிரசாதத்தாற் முன் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய யாவரும் சிருஷ்டி ஸ்திதி சங்ஹாரத் தொழில்களில் சாமர்த்தியத் தைப் பெற்றார்கள்.

அடுத்து. தேவ கின்னர கந்தருவர்களும், பித்ரு, யக்ஷர், தும்புருவர், முனிவர்களும் குருபணிவிடையின் விதியினை இவ்வளவு துல்லியமாக அறியார்கள்.

அடுத்து. பிரியமானவளே! தார்க்கிகரும், வாயில் வேதத்தை ஓதுவோரும், சோதிடத்தை அறிந்தோரும், கர்மாக்களைச் செய்வோரும், இலௌகீகரும் சிதைவின் றிய குருதத்துவத்தை யறியார்கள்.

அடுத்து. பெரும் அகங்காரமாகிய கர்வத்தினலும், தவம் வித்தை யென்பவற்றின் பிரேமையாலும் கர்மயந் நிரத்தைப்போல மீண்டும் மீண்டும் இச் சம்சாரத்தில் கீழ் மேலாய்ச் சுழல்பவர்கள் அவர்கள்.

அடுத. குருதத்வ பராமுகமானவர்கள் யக்ஞத் தைச் செய்பவராயினும் முத்தராகார். அப்படியே யோ காப்பியாசஞ் ஞெய்பவராயினும் முத்தராகார். தவத் தைச் செய்பவராயினும் முத்தராகார்.

அடுஅ. குருசேவையில் பராமுகர்களாகிய இருஷி கள், கந்தர்வர், பித்ருக்கள், யக்ஷர், சாரணர், சித்தர், தேவர் முதலியோர்களும் முத்தராகார்.

ஸ்ரீ குருகீதை முதல் அத்தியாயம்
முற்றிற்று

இரண்டாம் அத்தியாயம்

அங்க. மகாதேவி! சகல ஆனந்தத்தைத் தருவதும், சகல சௌக்கியத்தைத் தருவதும், போக மோக்ஷங்களைக் கொடுப்பதுமான குருவின் தியானத்தை மேலும் கேட்பாயாக.

கஙி. திருவுடைய, அதாவது ஞானசுவரியமுடைய, பரப்பிரம்மமாக விளங்கும் குருவை னன் ஸ்மரிக்கின்றேன். திருவுடைய பரப் பிரம்மமாகிய குருவை னன் பஜிக்கின்றேன். திருவுடைய பரப்பிரம்மமாகிய குருவைத் துதிக்கின்றேன். திருவுடைய பரப்பிரம்மமாகிய குருவை னன் வணங்குகின்றேன்.

கூஙக. பிரம்மானந்தமும், பரம சுகத்தைத் தருவதும், கேவலமும், ஞான வடிவினதும், துவந்துவாதீதமும், ஆகாயத்தைப்போன்று அளவிடற்கரியதும், தத்துவமஸி முதலியவற்றின் இலக்ஷியமும், ஏகமும், னித்தியமும், விமலமும், அசலமும், சகல புத்திகளின் சாக்ஷி வடிவமும், பாவாதீதமும், முக்குணங்களின்றியதும், சற்குருவுமாகிய அவரை னமஸ்கரிக்கின்றேன்.

கூஙஉ. இதய தாமரையில் கர்ணிகை னடுவிலிருக்கும் சிம்மாசனத்தின்கண் வீற்றிருக்கும் திவ்விய வடிவினரும், சந்திரகலாப் பிரகாசரும், சச்சிதானந்த வடிவினரும், னம் விரும்பிய வரத்தைத் தர அவதரித்துள்ளவருமாகிய குருவைத் தியானித்தல் வேண்டும்.

கூஙங. வெண்மை வஸ்திரம் தரித்தவரும், வெண்மைச் சந்தனமும் புஷ்பமும் அணிந்தவரும், முத்துமாலை

களா லலங்கரிக்கப்பெற்றவரும், மாருக் களிப்புடைய வரும், இரண்டு னேத்திரங்களுள்ளவரும், இடப்பாகப் பீடத்து திவ்விய சக்தியினை உடையவரும், இளனகை பூத்தொளிர்பவரும், பூர்ண கிருபா னிதானரும்,

கயிச. ஆனந்த சொரூபரும், ஆனந்தத்தைச் செய்பவரும், பிரசன்னரும், ஞானசொரூபரும், தனது தன்மையோடு கூடியவரும், யோகீந்திரரும், யாவ ராலும் துதிக்கப்பெறுபவரும், பவரோக வைத்தியரு மாக விளங்கும் ஸ்ரீமானகிய குருவை னித்தியம் யான் னமஸ்கரிக்கின்றேன்.

கயடு. ஜனங்களின் சம்சாரமென்னும் ஆலஹால மாகிய மோகம் கெடிதற்பொருட்டுத் தேவ குளிகை யாக்கப்பெற்றுள்ள சுவாத்மானந்த சமுத்திரத்தினைச் செவ்வையாய்க் காட்டியருளிய குரவரது திருவடித் தாம ரைகளை வணங்குகின்றேன்.

கயசு. எவரிடத்துச் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், னிக்கிரகம் (திரோபவம்) அனுக்கிரக மென்னும் வடிவின தாகிய ஐவகைக் கிருத்தியமும் அடிக்கடி தோன்றிப் பரி மளிக்கின்றதோ, அந்நக் குருவை னமஸ்கரிக்கின்றேன்.

கயள. தனது பாததாமரையில் சகல சம்சார பந்தங்களாகிய காட்டை யெரிக்கும் காலாக்கினியுடைய வரும், பிரம்மரந்திரத்தின் கண்ணுள்ள தாமரை னடுவி லிருக்கும் சந்திர மண்டலத்தை யுடையவரும்,

கயஅ. அகார ககார தகார முதலிய எழுத்துக்க ளடைக்கப்பெற்ற மூன்று ரேகைகளையுடைய தாமரை

யிலும், ஆயிரம் இதழ்களையுடைய மண்டலத்திலும், ஹம்ஸத்தைப் பக்கங்களிலுள்ள திரிகோணத்தின் கண்ணும், னடுனாயகமாக விளங்குகிறவருமாகிய குருவைத் தியானிக்கவேண்டும்.

கூக. னித்தியமும், சுத்தமும், னிராபாசமும், னிராகாரமும், னிரஞ்ஞனமும், னித்திய போதமும், சிதானந்தமுமான பிரம்ம சுவரூபமான குருவை யான்னமஸ்கரிக்கின்றேன்.

ஈ. சகல புவன சிருஷ்டியாகிய கற்பிதமான எல்லாவற்றையும் படைப்பதும், சகலவேத திருஷ்டியாகிய சத்பதார்த்த மொன்றனையே படைப்பதும், பொய்க் கூட்டங்களின் பரமேஷ்டியாக னின்று சத்பதார்த்த மொன்றனையே காண்பதும், பலகுண பரமேஷ்டியாயிருந்து மோக்ஷமார்க்க மொன்றனையே ஸ்தாபிப்பதும், சகல புவனங்களான அரங்கினை னிலையுறச்செய்யும் ஸ்தம்பமும், கருணைச மழையினைப் பொழிவதும், தத்துவ மாலைகளின் சமஷ்டியும், சகல சமய சிருஷ்டியும், சச்சிதானந்த திருஷ்டியுமாகிய ஸ்ரீ குருவின் திவ்விய திருஷ்டியானது என்னிடத்து னித்தியமும் வசிப்பதாகுக.

ஈக. சிவசாசனத்தால் (ஆணையால்) குருவிற்கு மேலானதில்லை. சிவசாசனத்தால் குருவிற்கு மேலானதில்லை. சிவசாசனத்தால் குருவிற்கு மேலானதில்லை. சிவசாசனத்தால் குருவிற்கு மேலானதில்லை.

ாஉ. விஷ்ணுவின் சாஸனத்தால் இக் குருவே சிவம். விஷ்ணுவின் சாஸனத்தால் இக் குருவே சிவம். விஷ்ணுவின் சாஸனத்தால் இக் குருவே சிவம். விஷ்ணுவின் சாஸனத்தால் இக் குருவே சிவம்.

ாஊ. பிரம்மாவின் சாஸனத்தால் குருவே ஒப்பற்ற தனித் தன்மையானதும் அறியப்பட்டதுமாம். பிரம்மாவின் சாஸனத்தால் குருவே ஒப்பற்ற தனித் தன்மையானதும் அறியப்பட்டதுமாம். பிரம்மாவின் சாஸனத்தால் குருவே ஒப்பற்ற தனித் தன்மையானதும் அறியப்பட்டதுமாம்.

ாஎ. இவ்வாறு குருவைத் தியானித்தலால் இயல்பாக ஞான முண்டாகிறது.

ாஏ. குருவினு லுபதேசிக்கப்பெற்ற வழியினல் மனதைச் சுத்தப்படுத்தவேண்டும். ஆத்மகோசரமான இவ்வெல்லாவற்றையும் அனித்தியமெனக் கண்டித்தல் வேண்டும்.

ாஐ. தோற்றுகின்ற யாவும் ஞேயமென்றும், அரூபமாகிய ஜீவன் ஞானமென்றும் சொல்லப்படுகின்றது. (ஆதலால்) ஞான ஞேயங்களைச் சமமாக்கவேண்டும். இதைவிட வேறு இரண்டாவது மார்க்கமில்லை.

ாஒ. இங்ஙு வெகுவாய்ச் சொல்லுவதினு லென்ன? சித்த விச்ராந்நியாகிய அமைதியானது மேலான குருகிருபையின்றி னூறுகோடி சாஸ்திரங்களாலும் அடைதற்கரியதாம்.

ஈஅ. கருணையாகிய வாள் வீச்சினல் மறுபிறப் புற்ற மகவின், அதாவது சிஷ்யனின், பாசங்களெட்டி னையும் சேதித்துச் செவ்வையாய் ஆனந்தத்தை யுண்டுபண்ணுபவர் எவரோ, அவரே சற்குரு என்னப் பெறுகின்றார்.

ஈக. மகாதேவி! இவ்வாறு கேட்டபின்னும் எவ னொருவன் குரு னிந்தை செய்கின்றானே, அவன் எக் கோடி காலத்தும் னீங்காத கோரமான னரகத்தை யடைகிறன்.

ஈஉ. தேவி! எத்தனை கற்பம்வரையில் தேகமிருக் கின்றதோ, அதுவரையில் குருவை ஸ்மரிக்கவேண்டும். குரு சன்னிதியில் லோபஞ் ஞெய்யலாகாது.

ஈஊ. பிராக்ஞர்களாகிய சிஷ்யர்கள் (குருவை நோக்கி) ஹூங்காரத்தால் பதில் ஒரு னளும் சொல்ல லாகாது. குரவனின் சன்னிதியில் ஒரு னளும் அசத் தியம் கூறலாகாது.

ஈஎ. குருசன்னிதியில் னீங்களென்று குறித்துப் பேசுபவனும், "ஹூம்" போட்டுப் பதில் சொல்லுகிற வனும், வாதிப்பவனும், னீரில்லாத இடத்தில் பிரம்ம ராக்ஷசனுய்ப் பிறக்கிறன்.

ஈஏ. குருசன்னிதியில் ஒருபோதும் அத்வைத பாவனை செய்யலாகாது.

ஈஐ. வெளியில் பார்க்கப்பட்டவைகளின்மேல் மறதியுண்டாகும் வரையில் குருபாதங்களை அர்ச்சிக்க

வேண்டும். அப்படிப்பட்டவனுக்கே கைவல்ய (மோக்ஷ) சித்தி யுண்டாகும். இதற் கன்னியமாக னடக்கிற வனுக்கு அது இல்லை.

ாயடு. சகல தத்துவங்களையு முணர்ந்தவனயி னும், குருவைப் புறக்கணிப்பானயின் அவனுக்கு மரண காலத்தில் மிகுந்த தடுமாற்ற முண்டாகவே செய்யும்; அது னிச்சயம்.

ாயசூ. குருவின் சத்பாவத்தால் சிறப்படைந்த வன் குருவின் காரியத்தை ஒதுக்கிவைத்துவிட்டு வேறொன்றிற்கு முதலிடம் கொடுத்துச் செய்யலாகாது. குருவைக் கேட்காமல் காரியத்தை ஆசரிக்கலாகாது. குரவனுள்ள திசையை நோக்கி னமஸ்கரியாமல் எழுந் நிருக்கலாகாது.

ாயள. தேவி! குருவானவர் இருக்கத் தான் ஒரு போதும் பிறருக் குபதேசிக்கக்கூடாது. அப்படிச் செய் வானயின் அவன் இராக்ஷஸனவான்.

ாயஅ. குருவின் ஆச்ரமத்தில் உல்லாசமாக உலாவுதல், பிரபுத்வமான காரியங்களைச் செய்தலா காது. குருவின் ஆணையைத் தானே செய்யவேண்டுமே யல்லாது பிறரைக்கொண்டு செய்விக்கலாகாது.

ாயக. உபாச்ரமம், மஞ்சத்திலிருத்தல், கால் னீட்டி உட்காருதல் அங்கபோக முதலியவற்றைச் செய்யலாகாது. மற்றைய லீலை (விளைதங்களையும்) செய்யலாகாது.

ஈஉடு. குருவின் வாக்கியம் தன் அறிவிற்கு னன்மையாகத் தோன்றினலும், தீமையாகத் தோன்றினலும் அதனை மீறி னடக்கலாகாது. இரவும் பகலும் அவரது ஆணையைச் செய்துகொண்டு, அடிமையைப் போலக் குரவனிடத்தில் வசிக்கவேண்டும்.

ஈஉடக. அவரால் விரும்பிக் கொடுக்கப்படாத குருவின் திரவியத்தை ஒருபோதும் அனுபவிக்க லாகாது. கொடுத்ததை அடிமையைப் போற் கொள்ளவேண்டும். இதனல் உன் ஜீவன் ரக்ஷிக்கப் பெறப்படுகின்றது.

ஈஉடஉ. குரவனல் விரும்பப்பட்டு அவர் உப யோகிக்கும் பாதுகை, ஆசனம், படுக்கை முதலிய எல்லாவற்றையும் னமஸ்கரிக்கவேண்டும். எதனையும் தன் கால்கள் படப் புழங்கலாகாது.

ஈஉடங. குரவன் னடக்கும்போது அவர் பின்னே செல்லவேண்டும். குரவன் னிழலைத் தாண்டலாகாது. அதிக வேஷத்தையும் அதிக அலங்காரத்தையும் (அவர் முன்) தரிக்கலாகாது.

ஈஉடச. குருவை னிந்திப்பவனின் னைவ் சேதிக்க சாமர்த்தியமில்லையாயின் அவன் வார்த்தை செவியில் விழாதபடி அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய் விட்டு, பிறகு வந்து வசித்தல்வேண்டும்; அல்லது அந்த இடத்தையே விட்டுவிடவேண்டும்.

ஈஉடரு. குருவின் உச்சிஷ்டத்தைப் பிறர் ஒருவருக்கும் கொடுக்கலாகாது. குருவின் ஆணையைச் செய்

யாமல் விடலாகாது. உச்சிஷ்டம் முழுவதையும் ஏற்றுக் கொண்டு தேவப்பிரசாதமாகத் தானே புசிக்கவேண்டும்.

ஈஉயசூ. பொய்யும், குருவிற்குப் பிரியமில்லாத தும், கர்வமுடையதும், னிமிர்தண்டமானதும், அவரை ஏவுந் நன்மையதுமாகிய வார்த்தைகளை குருசன்னிதியில் பேசலாகாது. குருவின் எந்த ஆணையையும் விசேஷ மாய் மதித்தல்வேண்டும்.

ஈஉயள. "பிரபுவே! தேவகுலத்தின் ஈசர்களுக் குச் சுவாமியே! என் அரசே! எங்கள் குல இறைவா" என்று தோத்திரித்து அவரை அழைப்பவனுய் எப் போதும் குருபாவனையோடு மிக்க உள் அச்சமுடைய வனுய் இருத்தல்வேண்டும்.

ஈஉயஅ. பார்வதி! முனிவர்களாலும், பன்ன காராலும், சுரர்களாலும் சபிக்கப்பட்டவனுயினும், அல் லது காலமிருத்யுவினல் பீடிக்கப்பட்டவனுயினும் அவற்றி னின்றும் அவனைக் குருவானவர் இரக்ஷிப்பார்.

ஈஉயக. குருவின் சாபத்தினை யடைந்தவனை இரக்ஷித்தற்கு சுரர் முதலிய எவரும் எவ்விடத்தும் சக் தராகார்.

ஈகூய. தேவி! இந்தக் 'குரு' வென்னும் மந்திர ராஜமான இரண்டெழுத்தும் ஸ்மிருதி வேதபுராணங் களின் சாரமேயாம்; ஸம்சயமில்லை.

ஈகூயக. உலகமரியாதை, மானம், முகஸ்துதி முதலியவற்றின் பொருட்டுத் தண்ட காஷாயங்களைத்

தரித்தவன் சன்னியாசி யெனத் தகான். ஞான தற் பரனே சன்னியாசியாவார்.

ஈகூயஉ. குரவன் பாதசேவையினல் மகாவாக்கி யத்தை அறிகின்றவ ரெவரோ அவர்களே சன்னியாசிக ளெனப் பெறுவார்கள். மற்றையோர் வேஷதாரிக ளாவர்.

ஈகூயஊ. ஓர் விளக்கு மற்றோர் விளக்கைத் தூண்டி ஏற்றிவைக்க ஹேதுவா யிருப்பதுபோல, குரு வானவர் பிரம்மத்தன்மையில் தான் விளங்குவதோடு னித்தியமும் னிராகாரமும் னிர்க்குணமுமான பரப்பிரம் மத்தை அறியும் அறிவைச் சிடன் உள்ளத்தில் தூண்டி ஏற்றிப் போதிக்கும் வல்லப முடையவராய் இருக்க வேண்டும்.

ஈகூயச. குருவின் கிருபையால் தனது ஆத்மா விடத்து ஆத்மகாமனகிய தன் பதியைத் தரிசித்தலால் ஜீவசமத்துவ முக்திமார்க்கம் கைவரப்பெற்று ஆத்ம ஞானம் பிரகிருத்திக்கின்றது.

ஈகூயடு. பிரம்மா முதல் ஸ்தம்ப பரியந்தமான ஸ்தாவர ஜங்கமும் பரமாத்ம சொரூபமாம். ஆதலால் ஜகன்மயமான குருவை னமஸ்கரிக்கின்றேன்.

ஈகூயகூ. சச்சிதானந்தமும், பாவாதீதமும், னித் தியமும், பூர்ணமும், னிராகாரமும், னிர்க்குணமுமாய் னின்று ஆத்மனிலையில் விளங்கும் ஜகத்குருவை னமஸ் கரிக்கின்றேன்.

ாகுயள. மேலானவற்றிற்கெல்லாம் மேலானதும், னித்தியகாலமும் ஆனந்தத்தை யுண்டுபண்ணுவதுப், இதயாகாச னடுவிலிருப்பதும், சுத்த ஸ்படிகத்தைப் போன்றதுமான குருவைத் தியானிக்கிறேன்.

ாகுயஅ. ஸ்படிகத்தில் ஸ்படிகத்தன்மையும், கண்ணுடியிற் கண்ணுடியின் ஒளிவும் எப்படி அபேதமாய் விளங்குகிறதோ அப்படியே ஆத்மாவினிடத்துச் சிதாகாச ஆனந்தமாய் விளங்கும் அது யானென்பது னிச்சயம்.

ாகுயக. அங்குஷ்டமாத்திரமும், சின்மயமுமாகிய புருஷனை இதயத்தில் தியானிக்கின் அங்கு எந்தத் தன்மை விளங்கி உள்ளம் பூரிக்கின்றதோ அதனை உனக்குச் சொல்லுகின்றேன்; கேட்பாயாக.

ாசயி. அணுவிற்கு அணுவும், மகத்திற்கு மகத்தும், அவிகாரமும், சிதானந்தமுமான அஜன் யான்; அமரன் யான்; ஆதியந்தமில்லாதவன் யான். பார்வதி! அபூர்வமும், அபரமும், னித்தியமும், சுயஞ்ஞோதியும், னிராமயமும், விரஜமும், பரமாகாயமும், துருவமும், ஆனந்தமும், அவ்வியமும்,

ாசயக. அகோசரமும், அப்படியே அகமியமும் (அறியப்படாததும்) னமரூபங்களின்றியதும், ஒசை ஒலியற்றதுமாகிய பிரம்மம் சுபாவமாக அதாவது உள்ளது உள்ளபடி அறியப்படுகின்றது.

ாசயஉ. எப்படிக் கற்பூரம், புஷ்பம், முதலியவற்றில்கந்த சுபாவத்துவமும், தன்மை வெட்பத் தன்

மைகளின் சுபாவமு மிருக்கின்றதோ, அப்படியே பிரம் மத்தினிடத்தில் சாசுவதத் தன்மை யிருக்கின்றது.

ாசயஉ. குண்டலமும் கடக முதலியனவும் எப்படி னிஜ சுபாவத்தால் சுவர்ணத்தன்மையா யிருக்கின்றன வோ, அப்படியே யான் சாசுவதமாகிய பிரம்மம்.

ாசயச. கீடம் (புழு)வானது அச்சம் தூண்டப் பட்டு மாருது குளவியையே னினைப்பதால் எப்படி அவ்வடிவமே யாகின்றதோ, அப்படியே னன் பிரம்ம மென்னும் பாவனையால், இயல்பாய் அத்தன்மையனகி எவ்விடத்தினு மிருத்தல்வேண்டும்.

ாசயடு. அப்படியே அந்நக்கரணத்தில் குருவைத் தியானித்தலால் தானே பிரம்மமய மாகின்ருன். பிண் டத்திலும், பதத்திலும் அப்படியே உருவத்திலும் குரு வைத் தியானித்தலால் முத்தராகின்றனர். இதிற் சமு சயமில்லை.

ாசயசூ. பார்வதிதேவி கேட்கலாயினர்:- மகா தேவரே! பிண்டமென்பது யாது? பதமென்பது யாது? உருவ மென்பது யாது? உருவாதிதமென்பது யாது? சங்கரரே! இதனை யெனக்குச் சொல்லியருளல் வேண் டும்.

ாசயள. ஸ்ரீ மகாதேவர் சொல்லலாயினர்:- பிண் டம் குண்டலினிசக்தி, பதம் ஹம்ஸ மெனப்படுகின்றது; உருவம் விந்து என்று அறியத்தக்கதாம்; உருவாதிதம் னிரஞ்ஞனமாம்.

ாசயஅ. பார்வதி! பிண்டத்தில் முத்தர்களும், பதத்தில் முத்தர்களும், உருவத்தில் முத்தர்களும், உருவாதீதத்தில் முத்தர்களுமாகிய யாவரும் முத்தர் களே. இதிற் சமுசயமில்லை.

ாசயக. னித்தியம் குருவைத் தியானித்தலி னலேயே தேகி பிரம்மமய மாகின்ருன். இதிற் சமுசய மில்லை.

ாருய. பிரியமுள்ளவளே! ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், கீர்த்தி, திரு என்று சொல்லப்பட்ட செல் வம் இவ்வாறு ஆறு குணங்களாகிய ஐசுவரியத்தை யுடையவரான தூலத்தில் உள்ள பகவானே ஸ்ரீ குருவாவார்.

ாருயக. சரீரிகளுக்குக் குரவனே சிவம், குரவனே தேவன், குரவனே பந்து, குரவனே ஆத்மா, குரவனே ஜீவன், குரவனுக்கு வேருனதில்லை.

ாருயஉ. தனித்தவராய், ஆசையற்றவராய், சாந்தராய், வியாகூலம், அசூயை முதலியவை யில்லாத வராய், மாரு இளமை உடையவராய், எவர் ஒருவர் விளங்குகின்ருரோ அவரே பிரம்மஞானி யெனப்பெறு கின்ருர்.

ாருயங. வேத சாஸ்திரங்களிற் சுகமில்லை. மந்திர யந்திரங்களிலும் சுகமில்லை. பூமியில் குரவனின் அருட்பிரசாதம் வழங்கப்பெறும் கேஷத்திரத்திற்கு அன்னியமான இடங்களில் சுக மென்ப தில்லை.

ாருயச. குரவன் பாதத் தருகி லுண்டாகும் வேதாந்த சம்மதமான சுகத்தைப்போன்ற சுகம் சர்வ ஆகமங்களிலும் வைணவம் முதலாகிய மதங்களிலும் இல்லை.

ாருயடு. எந்தச் சுகம் இராகமொழிந்த (அதாவது மோகம் ஒழிந்த) முனியாகிய ஏகாந்தவாசிக்கு உண்டா கின்றதோ, அந்தச் சுகம் இந்திரனுக்கும் உண்டாகிற தில்லை. சக்கிரவர்த்திகளுக்கும் உண்டாகிறதில்லை.

ாருயசூ. னித்தியம் பிரம்ம ரஸத்தைப் பருகி எவன் பரமாத்மாவினிடத்துத் திருப்தியா யிருக்கின் றானே, அவன் இந்திரனைத் தன் அடிமையாகக் கருது கின்றனனின், பிறகு அரசர்களைப் பற்றிப் பேசு வானேன்!

ாருயள. குருவின் மார்க்கத்தைப் பின்பற்றுதல் ஒன்றினாலேயே மேலான மோக்ஷம் உண்டாகிறது. ஆகவே மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் எப்பொழுதும் குருவினிடத்தில் பக்தி செலுத்த வேண்டியது கடமை யாகும்.

ாருயஅ. ஒரே அத்துவிதியன் யானென்பது குரு வாக்கியத்தினால் னிச்சயிக்கப்பெற்றது. இவ்வாறான அப்பியாசத்தினால் சிடன் னிமிஷமாத்திரத்தில் சமாதி யை அடைகிறான். ஜன்மபரியந்த முண்டாகிய அவ னது பாவங்கள் யாவும் அக்கணமே னசிக்கின்றன.

ாருயக. அவ்வியக்தத்தில் (காணப்படாததில்) ஆவாகனமேது? வியாபகத்தில் விசர்ச்சனம் (விடுதல்)

என்பது ஏது? அமூர்த்தத்திற் பூஜை ஏது? னிராமயத்தில் தியான மெப்படி?

ாசுயி. குருவானவர் இராஜஸ மயமான பிரம்மாவாய்ச் சிருஷ்டிக்கின்ருர். சத்துவ மயமான விஷ்ணுவாய் இரக்ஷிக்கின்ருர். தாமஸ ருத்திர வடிவமாய்ச் சங்ஹரிக்கின்ருர்.

ாசுயிக. சுவயம் (தானே) பிரம்ம மயமாய் அந்நப் பராபர வஸ்துவைத் தரிசிப்பாயாக. பரத்திற்கு மேலானது வேறில்லே. அஃது எல்லாவற்றிலு மிருக்கும் னிராமயமாம்.

ாசுயிஉ. அத்தன்மைய குருவின் அவலோகத்தை (பார்வையை) யடைந்து அவரது பிரசாதத்தால் சர்வ சங்ஙத்தையும் விட்டவனுய்த் தனித்தவனுய் ஆசையற்றவனுய்ச் சாந்தனுய் னிலேத்திருக்க வேண்டும்.

ாசுயிங. எப்போதும் சந்தோஷமடைந்த மனதுடைய அவன், பெற்றதையும் பெருததையும் அற்பத்தையும் அதிகத்தையும் னிஷ்காமமாகவே அனுபவிக்க வேண்டும்.

ாசுயிச. புவியில் தேகி சதானந்தனுய், என்றும் சாந்தனுய், சர்வமயனுய் எந்நெந்த விடத்தில் இரமிக்கின்ருனே (பூரணமாகச் சந்தோஷிக்கின்ருனே), அதனைச் சர்வக்ஞ பதமென்று கூறுவர்.

ாசுயிடு. எந்நவிடத்து அத்தகைய தேகி இருக்கின்ருரோ அத்தேசம் புண்ணிய க்ஷேத்திரமாம். தேவி!

இவ்வாறு முத்தனுடைய இலக்கணம், உன் முன் என் னல் சொல்லப் பெற்றது.

ாசுயசு. தேவி! இவ்வுபதேசமானது குருவின் மார்க்கத்தால் முக்தியைப் பெறுவது இன்னவிதம் என் பதை அறிவித்தது - ஆகவே அதைப் பின்பற்றி விவேகி களால் குரு பக்தியானது அத்தியந்தம் செய்யத்தக்க தாம்.

ாசுயள. னித்தியமும் பொருத்தமுமுள்ள ஆஸ் ரய மானவரும் அதாவது புகலிடமானவரும், எல்லாமா யிருப்பவரும், வேதகர்த்தாவும், சர்வ ஞானங்களை யுண்டுபண்ணுபவரும், தனது ஞானத்தையும் பிற ரது ஞானத்தையும் தருபவருமாய் விளங்கும் அந்நக் குரவனகிய ஈசுவரனை னமஸ்கரிக்கிறேன்.

ாசுயஅ. பிரியமுள்ளவளே! வேதங்களையும் ஆறு அங்கங்களையும், ஆகமங்களையும், அத்தியாத்ம முதலிய சாஸ்திரங்களையும் ஒருவன் ஓதியிருந்தபோதினும், குரு வின்றி மெய்ஞ்ஞான முண்டாகாது.

ாசுயக. சிவபூஜையில் ரதனக (அதாவது காம முடையவனக) இருந்தாலும், அல்லது விஷ்ணு பூஜை யில் ரதனக விருந்தாலும் குருதத்துவத்தைக் கைப்பற் றுதவனுயின், அவையாவும் வியர்த்தமேயாம். இது னிச்சயம்.

ாளய. சிவனுடைய ஸ்வரூபத்தை யறியாமல் சிவபூஜை செய்வானுயின், அது சித்திரத்திலுள்ள விளக்கைப்போல் பேருக்குமாத்திரம் பூஜையாகும்.

ாஎய்க. குருவினது திகைமயின் மகிமையினல் தேகி செய்யும் எல்லாக் கருமங்களும் பலனேடு கூடின வைகளாக ஆகும். ஒரு சற்குருவை அடைந்த இலா பத்தினல், எல்லா (விதமான) இலாபங்களும் உண்டா கும். குருவில்லாதவன் மூடனுவான்.

ாஎய்உ. எதனல் சிவரூபத்தினையும் தனது ஆத்ம ரூபத்தினையும் தானுக அறியமாட்டானே அதனல் குரு வில்லாதவன் மிருகமென்றே, பூச்சியென்றே, விட்டி லென்றே சொல்லுதற் குரியவனுகின்ருன்.

ாஎய்க. ஆகையால் எல்லாவிதமான உலக ஆசார அனுஷ்டானப் பற்றுக்களையும் விட்டவனய், சாஸ் திரக் கூட்டங்களை விட்டு னீங்கினவனய், முழு பிரயத்தி னத்தோடும் குருவினையே செவ்வையாய் ஆசிரயிக்க வேண்டும்.

ாஎய்ச. எவர், சகல சந்தேகங்களும் ஒழிந்து போகும்படிச் செய்து, பரம ரகசியமான விஸ்வரூப தரிச னத்தைச் சர்வவேதங்களும் ஒன்றுபடும்படி னிற்கக் காட்டுகின்ருரோ, அத்தன்மைய குருவாகிய ஈசுவரனைப் பூஜிக்கின்றேன்.

ாஎய்ரு. குருவேடம் போட்டுத்திரியும் ஞான ஹீனன் விடத்தக்கவனுவன். அவன் மித்தியாவாதி யாகிய விடம்பகனுவான். (அதாவது, பொய்யை மெய் யென்று வாதிப்பவனுகிய தற்பெருமைக்காரனுவான்). தனது விசிராந்நியை (அதாவது னிம்மதியை) அறி யாதவன் பிறர் சாந்நியைச் செய்பவனு? என்ன?

ாஎயகூ. சிலையோடு (கல்லோடு) சேர்க்கப்பட்டுள்ளதனைக் கடக்கச் செய்வது என்பது ஆகக்கூடிய காரியமா? தன்னைக் கடப்பித்துக்கொள்ள அறியாத அது, எங்ஙனம் தன்னைச் சார்ந்த பிறரைக் கடத்துவிக்கும்? (அதுபோலத் தன்னைக் காத்துக்கொள்ளத் தெரியாதவன், பிறரை எப்படிக் காப்பாற்றுவான் என்பது கருத்து).

ாஎயள. ஐயோ, கஷ்டம்! அவர்கள் வந்திக்கத் தக்கவர்களல்ல. அத் தீயோரைக் காண்பது பிராந்நியை (மயக்கத்தை) உண்டுபண்ணும். அத்தன்மைய வேடதாரிகளை ஒழித்துத் தீரராகிய ஒரு சற்குருவைச் செவ்வையாய் ஆசிரயிக்கவேண்டும்.

ாஎயஅ. பாசாண்டிகளும், ஸ்திகர்களும், பேதகபுத்தியுடையோரும், பெண்ணைசை பிடித்தோரும், துராசாரரும், செய்னன்றி மறப்போரும், பிறரை மயக்கி ஏமாற்றுபவரும், கர்மத்தினின்றும் வழுவியவர்களும், இரக்கமற்றவர்களும், நிந்திக்கப்படும் தர்க்கங்ஙளால் வாதிப்போர்களும், காமிகளும், கோபிகளும், கொலைத் தொழிலுடையோர்களும், சண்டிகளும்,

ாஎயக. இன்னும் ஞான மின்றியவர்களும், பாபிஷ்டர்களு மாகியவர்களை, அவர்கள் போடும் வேஷங்ஙளினல் ஏமாந்து போய்க் குருவாகக் கொள்ளலாகாது. மேற்சொன்ன தோஷங்ஙளற்ற மெய்ஞ்ஞான னிஜச் செயலுடைய ஒரு குருவைத் தீர விசாரித்து அறிந்து அவரை ஏகபத்தியினல் சேவிக்க வேண்டும்.

ஸ்ரீஅம். தெய்வஞயகி! ஒரு சற்குருவை அடைந்து சீடனுகாத அன்னியன் எவனுக்கும் குரு ரகசியமாகிய இதைச் சொல்லலாகாது. னரர்கள் மனித உடலெடுத்த பயனை அடைவதற்கு னிச்சயமாகக் குரு பக்தியே மூல காரணமாக இருக்கிறது.

ஸ்ரீஅங. தேவகுருமுகமாக அடையப்பெற்ற யாவும் முத்திப் பயன் அளப்பனவும், பாவத்தை அறவே ஒழிப்பனவுமாம். எது எது தனக்கு இதமான, அதாவது னன்மையான வஸ்துவோ, அந்நந்நத் திரவியத்தைக் குருசன்னிதியில் வஞ்சிக்காது சமர்ப்பித்தல் வேண்டும்.

ஸ்ரீஅஉ. னல்ல விரதமுடையவளே! குரு தேவர்க்கு அர்ப்பணமாகச் சமர்ப்பிக்கப்பெறும் வஸ்து எதுவோ, அதுவே எனக்குத் திருப்தியளிப்பது. ஸ்ரீ குருவின் பாதுகையாகிய முத்திரையையும், மூலமந்திரத்தையும் மகா ரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீஅங. ஞதனே! முமூட்சுக்களால் பாவிக்கப்படும் ஆத்ம யுக்தியில் கர்மரூபமாகிய இத்தேக உபசாந்தியின் பொருட்டு

ஸ்ரீஅச. எது னன்மை எனத் தேர்ந்து சிந்தித்து வந்திக்கப் பெறுகிறதோ, அத்தன்மைய தங்கள் பாதாரவிந்தங்களைத் தனுகரண இந்திரிய பிராண மனோவாக்குகளால் சதா னமஸ்கரிப்பவளாயிருக்கின்றேன்.

ாஅடு. பிரியமுள்ளவளே! இந்நத் தெய்வ வணைக்கத்தால் எத்தகைய மேலான காரியம் கைபலித மாகின்றதோ அதனை உனக்குச் சொல்லப்போகின் றேன். தேவி! அதைப் பூரணமாகப் பெறுவதற்கு-முத லில் லோகோபகாரமான லௌகீகத்தைச் சீடன் விட்டு விடல் வேண்டும்.

ாஅகூ. லௌகீகக் கிரிகையாதிகளால் சீடன் ஞான ஹீனனாகிப் பவக்கேட்டில் விழ்கின்ருன். அதை விட்டு ஞானகுரு இச்சைப்படி னடந்நால் அவனது சகல கருமங்களும் னிஷ்கர்ம மாகின்றன.

ாஅஎ. இத்தகைய குருகீதையைப் பக்தியுடன் படிப்பதாலும், கேட்பதாலும், தேகி சகல னற்பயனையு மடைகிருன். பிரியமுள்ளவளே! இதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் முதன்மை பெற்ற மந்நிரமாகும். இது சகல பாவங்களையும் கெடுப்பதும், சகல தரித்திரியங்களையும் னைசஞ்ஞெய்வதும் ஆகும்.

ாஅஅ. இந்நக் கீதை அகால மிருத்யுவைக் கெடுப்பதற்கும், எல்லா விபூதியினது (அயிஸ்வரியங் களினது) சித்தியைப் பெறுவதற்கும் வழிகாட்டியா யிருக்கிறது.

ாஅக. தேவி! குசம் (தர்ப்பை) அறுகு என்ப வற்ருலாகிய ஆசனத்திலும், சுத்தமாகிய கம்பள ஆச னத்திலும் உட்கார்ந்து, ஏகாக்கிரக சித்தனாய்க் குருவின் னாமத்தை ஜெபிக்கவேண்டும்.

ஸகம். வஸ்திர ஆசனத்தில் தரித்திரியமும், பாஷாணத்தில் (கல்லில்) ரோக சம்பவமும், தரையில் துக்கமும் உண்டாகும். கட்டை விஷ்பலம் தரும்.

ஸகஸ்க. கிருஷ்ணாசனத்தில் (கருப்புவர்ண மானின் தோலில்) ஞான சித்தியும், புலித்தோலில் மோக லக்ஷ்மியும், தர்ப்பாசனத்தில் ஞான சித்தியும், கம்பளத்தில் சர்வசித்தியும் உண்டாகும்.

ஸகஸ. ஆக்னேயத்தில் ஆகர்ஷணமும், வாயு திசையில் சத்ரு நாசமும், நிருதியில் தரிசனமும், ஈசான்னியத்தில் ஞானமும் உண்டாம்.

ஸகஸக. சந்தியின் பொருட்டு வடக்குமுகமும், வியத்தின் பொருட்டுக் கிழக்குமுகமும், மரணத்தின் பொருட்டுத் தெற்கு முகமும், செல்வ வரவின் பொருட்டு மேற்குமுகமும் ஜபித்தற் குரியனவாம்.

ஸகஸ்ச. சிவனே! இக்கிரக சாந்தியானது மோகத்தை நீக்குவதாயும், பந்தங்களினின்றும் விடுவிப்பதாயும், முத்தாபங்களைப் போக்குவதாயும், வைக்கிரக பயத்தைக் கெடுப்பதாயும், ஆத்ம ஞானத்தினைப் பெற உதவுகின்றதாயு மிருக்கின்றது.

மூன்றும் அத்தியாயம்

ஸகஸ்ரு. குரு மந்திரம் எவன் ஜபித்திருக்கின்ற தோ அவனுக்கு யாவும் சித்திக்கின்றன. அஷ்ட பாசங்களும் ஒழிவதற்குக் குருகீதையாகிய ஜலத்தில் தத்துவ ஞானி எப்போதும் ஸ்னானம் செய்கின்றான்.

ாகயசூ. சத்து அசத்துக்களைப் பிரித்தறியும் பிரம்ம ஞான சிரேஷ்டராகிய அவரே சாக்ஷாத் சற்குரு. அவர் எவ்விடத்தும் இரவும் பகலும் பரமாத்ம சொரூபத்தில் ஐக்கியமாகி இருக்கின்ருர். அத்தகைய சற்குரு புழங்கும் எல்லைகள் யாவும் பவித்திரம், அதாவது தூய்மையானவையாம்.

ாகயள. அவர் எங்கு அமருகின்ருரோ அந்த க்ஷேத்திரபீடத்தில் சகல தேவகணங்களும் சூழ்ந்து னிற்கின்ருர்கள்.

ாகயஅ. பார்வதி! குரவனைச் சந்தோஷிக்கச் செய்வதால் தேகி முத்த னாகின்ருன். அவரது கிருபை யால் அணிமாதி சக்திகள் கைவர வாகின்றன.

ாகயக. சிவையே! என்னல் வெளி யாக்கப் பெற்ற இக் குருகீதை சகல தர்மத்தின் சாரமாகும். குருகீதைக்குச் சமமான தோத்திரமும் ,குருவுக்கு மேலான தத்துவமு மில்லை. இது சத்தியம், சத்தியம். மறுபடியும் சத்தியம்.

உஈ. குருவே தெய்வம். குருவே தர்மம். குருவி னிடத்து னிழல் போன்று னின்று, அவரது செயலுக் கெல்லாம் ஒத்துப்பழகி, வைராக்கிய சித்தனாகி னிற்ப தே தவம். குருவுக்கு மேலானது எதுவும் இல்லை. இதனை மும்முறை உனக்குச் சொல்லுகிறேன்.

உஊக. தேவி! குரவனின் சந்தோஷ மாத்திரத் தால் தேகி சகல பிறப்புக்களிலும் செய்த யாகம், கிரி யை, விரதம் முதலிய யாவும் பயனுள்ளவை யாகின் றன.

ஊஉ. சற்சிடனுக்குத் தன் சரீரம், இந்நிரியங்கள், பிராணன், சம்பத்து, உற்ருர் உறவினர், தாய் தந்தை, சாதி குலம், சர்வமும் குரவனே. அத்தகைய குரு பாவனையே, மேலான தீர்த்தம். மற்றைய தீர்த்தங்கள் யாவும் பயனற்றனவே. தேவி! ஸ்ரீ குருவின் சரணரவிந்தம் ஒன்றே சகல தீர்த்த வடிவமாகும். இஃது பரம ரகசியமானது. வெளிப்படையாகச் சொல்லத் தக்கதன்று. உன்னிடத்தில் எமது ஆத்மப் பிரியத்தால் இது சொல்லப்பெற்றது. ஆகவே இதைப் பாவிகள் செவியில் படாதபடிச் செவ்வையாய் மறைத்து வைக்க வேண்டும்.

ஊஙு. வில்வ விருட்சத்தினடியிலும், ஆலவிருட்சத்தினடியிலும், மா விருட்சத்தின் கீழும் இருந்து குரு மந்தை ஜபித்தலால் தேகி சித்தியை அடைகின்ருன்.

ஊச. தேவி! குரு பக்தியுடமை எந்தப் பூமியில் இருக்கின்றதோ, அந்தப் பூமி தன்னியமாம், அதாவது சொந்தச் சொத்தாம். அதே போல் எந்தக் குலத்தில், எந்தச் சாதியில் குரு பக்தியுடமை இருக்கின்றதோ, அந்தக் குலம், அந்தச் சாதி தன்னியமாம்.

ஊடு. எவர்கள் மந்த பாக்கிய முடையவர்களாய், அசக்தர்களாய், விமுக்தராய் அதாவது எதிரிகளாய்ச் சற்குரு சேவையைப் பின்பற்றி னடப்பதில்லையோ அவர்கள் அசூசியான னரகத் தியில் எறியப்பட்டு அங்கு, சதா வேகின்ருர்கள்.

ஊசு. பார்வதி! எவர்களுக்கு சற்குருவின் கிருபையில்லையோ அவர்கள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்,

சித்தர், முனிவர், தேவர் என்று சொல்லப்பெற்ற எந்நத் தெய்வீகச் சிறப்பை எய்தினவர்களாயிருந்நாலும் அவர் களது வித்தை, தனம், வலிமை, பாக்கியம் முதலிய யா வும் பயனற்றவைகளாகி, கீழ்நோக்கிச் செல்லுகின்றவர் களாக ஆகிவிடுவார்கள்.

உஎ. சிஷ்யனது பொருளை அபகரிக்கும் பாசாண்டியர்களாகிய குருமார்கள் அனேகருளர். ஆக வே அவர்களைவிட்டு ஒதுங்கி, சிஷ்யனது இருதய தாபத் தைக் கெடுக்கும், பெறுதற்கரிய சற்குரு ஒருவரையே தேகி, தேடி அடையவேண்டும்.

உஅ. சாதுரிய முடையோனும், விவேகியாய், ஆத்ம ஞான முடையவனும், சுசியாய் அதாவது மாசற்ற மனமுடையவனும் இருக்கும் தேகிக்கே குருத்துவம் சோபிக்கின்றது.

உக. இலௌகிகமான சாஸ்திரங்களைக் கற்பிக் கின்ற குரு சூசகன் என்றும், வர்ணச்சிரம தர்மா தர் மங்களைக் கற்பிக்கின்ற குரு வாசகன் என்றும், பஞ்சாட் சர முதலிய மந்திரங்களை வாயிலில் உபதேசிக்கிற குரு வைப் போதகன் என்றும், மோகனம் மாரணம் வசியம் முதலிய துச்சமான மந்திரங்களைக் கற்பிக்கின்றவனை னிஷிதகுரு என்றும், சங்கடங்களுக் கிருப்பிடமான சம் சாரத்தை அனித்தியமென்று காட்டி, வைராக்கிய பதத் தை உணரச் செய்கின்ற குரு விகிதன் என்றும், தத்துவமஸி முதலிய மகாவாக்கியங்களை உபதேசித்து, பவரோக னிவாரணைக்கு வழிகூட்டுகிற குரு காரணகுரு

என்றும் குருக்கள் பலவகைப் படுகின்றார்கள். ஆகலின் புத்திசாலியானவன் தானே னேராய் னன்றுகப் பரி சோதித்துத் தத்துவ னிஷ்டராகிய ஒரு பரமகுருவை அடையவேண்டும்.

உாய. சந்தேகங்கள் எல்லாவற்றையும் அடி யோடு னிவிருத்தி செய்வதில் வல்லவரும், ஜனனமரண பயத்தை அடியோடு விலக்குகிறவருமாக விளங்கு கிறவர் எவரோ, அவரே பரமகுருவாக எண்ணப் பெறு கின்றார்.

உாயக. அனேக ஜன்மங்களிற் செய்த புண்ணி யத்தினல் இவ்விதமான மகாகுரு கிடைக்கிறார் – இக் குருவை அடைந்த சிடன் மறுபடியும் ஜனன மரணத்தை அடைகிறதில்லை.

உாயஉ. பார்வதி! மேலே சொன்னபடி குருக்கள் பலவித மானவர்களா யிருக்கிறார்க ளாகையால், பூர்ண முயற்சிகொண்டு ஓர் பரமகுருவைத் தேடி அடைந்து அவரைச் சேவிக்கவேண்டும். தவறி ஒரு னிஷித குரு வை அடைந்து விட்டாலோ, னித்திய கால னரக அவஸ் தையே வந்து கிட்டும்.

உாயங. மகாதேவருடைய இந்த வார்த்தை களைக் கேட்ட மகாதேவி கலக்கமுற்றவர்களாய்ச் சங்க ரரைப் பார்த்துக் கூறியதாவது:– தேவதேவனே! னுண் ணறிவற்றவர்களும், மரணபயமுற்றவர்களும் தவறி னிஷிதகுருவை அடைவார்களேயானல் அவர்களுடைய கதி என்ன ஆவது என்று அச்சத்துடன் கேட்க – ஸ்ரீ மகாதேவர் சொல்லலாயினர்:–

ஊசி. மனுஷனனவன் எப்போது விரக்தி அடைகின்றனே, அப்போது அவன், சுருதி சிரசுக ளாகிய வேத அரசர்களால் தன்னுடைய னன்மை தின்மைக்குத் தானே அதிகாரி என்னப்படுகின்றன். ஏனெனில் எந்த ஒரு படைப்புக்கும் இல்லாத உன்னத அறிவு இவனுக்குக் கொடுக்கப் பெற்றுள்ளது. ஆகவே அதைக் கொண்டு, துன்பமே வந்து அணுக முடியாத தும் னித்திய முத்தியை அளப்பதும் அகண்டமாய் ஒரே மாறுத தன்மையோடு விளங்கும் பிரம்மத்தைத் தன்னில் எவரால் செவ்வையாய்க் காட்டப் பெறுகின்ற தோ அத்தகைய ஒரு பரம தேசிகரைத் தேடி அடைய வேண்டியது கடமையாகி விடுகிறது.

ஊசு. எவர், மோகம் முதலியவை அற்றவ ரோ, சாந்நிசொரூபரோ, பரம திருப்தியை அடைந்தவ ரோ, பிரம்ம விஷ்ணுக்களின் செல்வத்தையும் துச்ச மாக னினைக்கிறவரோ அவரே பரமகுரு ஆவார்.

ஊசூ. துஷ்தபாவத்திற்கு அப்பால் ஆனவரும், சுய அனுபவப் பிரகாசம் கைவரவானவரும், தன்னை அண்டியவர்களின் அஞ்ஞான மென்னும் மாரண இரு னைப் போக்குகின்றவருமாய் விளங்கும் சர்வக்ஞரே பரம குரு.

ஊஎ. எவரைப் பார்த்த மாத்திரத்தில் மனத் திற்குத் தானகவே சாந்நியும், திடமும், மகிழ்ச்சியும் உண்டாகின்றதோ அவரே பரம குரு.

ஊயஅ. மந்திரவாதிகள், யோகிகள் என்று வேடம் போட்டுத் திரிகின்றவர்களை எவர் துச்சமாகக் கருதுகின்ருரோ அவரே பரமகுரு.

ஊயக. பார்வதி! தன்னையறிந்த தத்துவ ஞானி களில் மௌனி யென்றும் வாக்மீ என்றும் இருவகைப் படுகின்ருர்கள். மௌனிகளுக்குப் பிறரை மாற்றித் திருத்த வேண்டும் என்ற இச்சை வருவதில்லை. ஆனல் வாக்மி யானவரோ தனது வல்லப வாக்கினல் சுருதி யுக்தி அனுபவத்தை வைத்துச் சீடனின் சந்தேகங்கள் அனைத்தையும் சேதித்து, அவனது கொடிய மரண பயத்தை னீக்கி, அவனுள் ஜீவதரிசனையைச் செய்து வைக்கின்ருர்.

ஊஉய. அத்தகைய பரமகுருவின் திருமேனியைத் தேகி பக்தியுடன் ஜபிப்பதனல் அழிகருவழிவந்த அவனது பாவங்கள் யாவும் னசித்துப் போகின்றன – இதில் சற்றேனும் சந்தேகமில்லை.

ஊஉயக. ஸ்ரீ குருவைப் போன்ற தெய்வம், ஸ்ரீ குருவைப் போன்ற தந்தை, ஸ்ரீ குருவைத் தியானிக் கின்றதைப் போன்ற கருமம் பூமியின்கண் இல்லை. இல்லவே இல்லை.

ஊஉயஉ. மரணதருவாயில் தன் குலமாவது, தான் தேடிய செல்வமாவது, தன்னுடைய பலமாவது, தான் கற்ற சாஸ்திரங்களாவது, உற்ருர் உறவின ராவது, கூடப் பிறந்த சகோதரர்களாவது இவனுக்கு வந்து உதவப் போவதில்லை. பரமகுரு ஒருவரே வந்து

உதவி, னித்திய கால அவஸ்தையாகிய அந்த மரண ஆபத்தினின்று கரை யேற்றுகின்றார்.

உாஉயங. தேவி! உண்மையாகச் சொல்லு கிறேன் – குரு சேவையினல் குலமே சுத்தமாகும். குரு வைத் திருப்தி செய்வதொன்றினல் பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்க ளெல்லோரும் திருப்தி அடைகின்றார் கள்.

உாஉயச. அழிவில்லாத ஈசுவர ரூபத்தைக் குரு ஒருவரே அறிவார். அவருடைய பிரசாதத்தினற்றன் அந்த சுவரூப ஞானம் உண்டாகின்றது. அவ்வாறின் றிக் கோடிக்கணக்கான சாஸ்திரங்களைக் கற்பதினல் அது உண்டாகாது.

உாஉயரு. தேவி! குரு மூலம் சுவரூப ஞானம் அடையாதவன் செய்யும் தவம் ஜபம் முதலியன யாவும் சிறுபிள்ளைகளின் விளையாட்டும் அறிவற்ற பிதற் றலும்போல் வியர்த்தமேயாம்.

உாஉயசூ. ஜனங்கள் சிலர் சிவனையும், சிலர் விஷ்ணுவையும், சிலர் பிரம்மாவையும், சிலர் சத்தியை யும் தெய்வமென்று சொல்லி வணங்கி – தன் தன் தெய்வமே மேலானது என்று வீண்க வாதம் செய்கிறார் கள். இவர்கள் குரு முகமாக மெய்யை அறியாததால் பிராந்தர்களாய் அதாவது மயக்க முற்றவர்களாய்த் தன்னை அறியாத மாக்கள் அதாவது மிருகங்களுக் கொப்பானவர்க ளாகிறார்கள்.

ஊஉஎள. பிரியையே! ஆகையால் மோக்ஷப் பிராப்திக்காகக் குருவையே பஜித்தல்வேண்டும். ஒரு சற்குரு வில்லாமல் மூடர்கள் அந்த மேலான பதத்தை அறியவே முடியாது.

ஊஉஎஅ. பார்வதி! சற்குருவின் கருணையினல் சிடனின் இருதய முடிச்சு அறுகின்றது. சந்தேகங்கு ளெல்லாம் னசித்துப்போகின்றன. பூர்வ கர்மங்குளெல் லாம் ஒழிந்து னசமாகின்றன.

ஊஉஎக. வேதசாஸ்திரங்குளில் சொல்லியுள்ள தை அனுசரித்து சிறப்புடன் செய்யப்பெற்ற குருபக்தி யினல் சிடன், அறியாத காலத்தில் செய்த கோரமான பாதகங்குளினின்றும் விடுபடுகிறன்.

ஊஉஎய. துர்ச்சங்குத்தைவிட்டு விலகி, பாப கர் மங்குளின் தொடர்பற்று, குரோதம் கர்வம் முதலியவற் றை விட்ட தியாக சிந்தையைப்பெற்ற ஒருவனுக்கு சற் குருவின் பேரிரக்கத்தால் தேவப் பிறப்பாகிய மறு பிறப்பு அளிக்கப்பெறுகிறது.

ஊஉஎக. அப்பொழுதுதான் அவன் கிரியை என்ற படிகடந்து, குரு சாயுட்சியம் என்ற பதத்தைப் பெறுகிறன். அப்படி யில்லாதவன் குரு சேவையாகிய மேலாம்பரமான ஆசாரத்தைப் பாலிப்பது எப்படி?

ஊஉஎஉ. ஒருவன், சக்தனையினும் அசக்தனையி னும் தேசிகரது பாதத்தைச் செவ்வையாய் ஆசிரயீப் பானையின், அதாவது எதார்த்த ஒட்டுதலோடு புகலிட மாகக் கொள்வானையின், அவன் இந்த மனிதப்பிறப்பு

எடுத்தது பயனுள்ளதாகின்றது. இகபர சௌபாக்கியத்தைத் தருவதாகின்றது.

ஓகூயஙூ. தேவி! எனது ஆத்மப் பிரியத்தின் பொருட்டு அத்தியந்த சித்தபரிபாக முள்ளவனுக்கும், முயற்சியோடு கூடிய பக்தியுடையவனுக்கும் எப்போதும் இதனைச் சொல்லவேண்டும்.

ஓகூயசு. சிவையே! எல்லாச் சாஸ்திரங்களிலும் வைத்து இக்கீதா சாஸ்திரம் இரகசியமானது. னன் ருய்ப் பரீக்ஷித்து, ஆன்ம சுத்தியுள்ள சாதகனுக்கு இதனைச் சொல்லவேண்டும்.

ஓகூயடு. னற்கருமங்களின் பரிபாகத்திலல் சித்த சுத்தி யுண்டாகிறது. (அதற்குப் பின்) னன் முயற்சியுடன் மெய்யில் ஈடுபடுபவனுக்கே புத்திமானவன் இந்தக் குருகீதையைச் சொல்லவேண்டும்.

ஓகூயசூ. ஸ்திகனுக்காவது, னன்றி யறிவில்லாதவனுக்காவது, இடம்பாசாரிக்காவது, முன்னென்று பின்னென்று பேசுவோனுக்காவது, பக்தியில்லாதவனுக்காவது, விபக்தனுக் (விரோதிப்பவனுக்) காவது ஒரு பொழுதும் இதைச் சொல்லக்கூடாது.

ஓகூயள. சுபாவத்தில் பெண்ணைசை கொண்டவனுக்கும், மூர்க்கனுக்கும், காமத்தினல் கெட்டுப்போன சித்தத்தை யுடையவனுக்கும், தெய்வ னிந்தன செய்பவனுக்கும் குரு கீதையைக் கற்பிக்கக்கூடாது.

உாகுயஅ. சிவையே! இக்கீதாசாஸ்திரமானது பாவமெல்லாவற்றையும் போக்குகிறதாயும், எல்லா உபத்திரவங்களையும் னிவாரணஞ் ஞெய்கிறதாயும், ஜனனமரணத்தைக் கெடுப்பதாயு மிருக்கிறது.

உாகுயக. தேவி! இப்படிச் சுருக்கமாய் வேதத் தின் ஸாரமெல்லாம் (உனக்கு) சொல்லப்பெற்றது; குருபதத்தினை யல்லாது ஜனங்களுக்கு வேறுவிதத் தால் னற்கதி கிடையாது.

உாசய. அனேக ஜன்மங்களில் செய்யப்பட்ட பாவத்தினல் (குரு விசேஷமென்னும்) இத் தேவ ரகசிய அறிவிப்பு உருசிக்கிறதில்லை. ஜன்மபந்தம் னிவாரண மாவதற்காக யாரும் எப்பொழுதும் குருவையே அடைய வேண்டும்.

உாசயக. 'னனே ஜகத்தெல்லாம். னனே பரம பதம்' என் றிவ்விதமான ஞானம் எவரிடத்திலிருந்து உண்டாகிறதோ, அத்தகைய குருவை னமஸ்கரிக்கின் றேன்.

உாசயஉ. 'விகற்பங்களெல்லாம் போதும்; சர் வத்திற்கும் முடிவு யானே உளன்; சராசர ரூபமான இந்த விசுவமானது என்னிடத்தில் உள்ளது' என் னும் இந்த ரகசியமானது எவரால் எனக்குத் தெரிவிக் கப் பெற்றதோ, அந்தக் குரு ஒருவர்தான் னமஸ்கரிக் கத் தகுந்தவர்.

ஓசயிகூ. எவருக்கு ஆதி மத்தியம் அந்நம் இல்லையோ, கை கால்கள் முதலிய கரணங்ங்ள் இல்லையோ, னும கோத்திரங்ங்ள் இல்லையோ, விதி விலக்கு இல்லையோ, ஜாதியாவது வர்ணமாவது கிடையாதோ, ஸ்திரீ புருஷன் னபும்ஸகன் என்னும் ரூபங்ங்ளில்லையோ,

ஓசயிச. ஆகாரமாவது விகாரமாவது இல்லையோ, ஜன்மமாவது மரணமாவ திலலையோ, பாப புண்ணியங்ங்ளு மில்லையோ, அதத்துவ மில்லையோ, ஒரே தத்துவ ஸ்வரூப முள்ளதோ, சகஜ சமரசமே உள்ளதோ, அத்தகைய ஸத்குருவை னமஸ்கரிக்கிறேன்.

ஓசயிடு. னித்தியமானவரும் சத்திய (சுவரூப) மானவரும், சித் ஸ்வரூபமானவரும், னவமும், பவ்விய மும், பராத்பரு மானவரும், சுத்த புத்த னிரஞ்ஞனு மானவருமான குரு சேகரருக்கு, அதாவது பரமகுரு விற்கு எப்பொழுதும் னமஸ்காரம்.

ஓசயிகூ. சச்சிதானந்த வடிவினரும், வியாபக முடையவரும், பரமாத்மாவும், பிரகாச ஆனந்த வடிவினருமாகிய ஸ்ரீ குருனாதருக்கு னமஸ்காரம்.

ஓசயிள. சத்திய ஆனந்த சொரூபரும், ஞான முக்கியமான ஆனந்தத்தைச் செய்பவரும், வேத வேதாந்நங்ங்ளா லறியப்படுபவரும், புத்திக்குச் சாக்ஷியு மாய் விளங்குபவருமாகிய குருவிற்கு னமஸ்காரம்.

ஓசயிஅ. வித்தை யவதாரணம் அதாவது வித்தையின் னிச்சயஞ் ஞெவ்வையாய்ச் சித்தித்தற் பொருட்டு

ஏற்றுக் கொள்ளப்பெற்ற அனேக தேவ வல்லபங்களை யுடையவரே! ஞானே! பகவானே! சிவமும் குருவடிவமு மாகிய உமக்கு னமஸ்காரம்.

ஓசயக. னவமும் (புதிதும்), னவ வடிவமும், பரமார்த்த முக்கிய வடிவமும், சகல அஞ்ஞானத்தையும் (இருளையும்) பேதிக்கும் சூரியனும், சிற்கனமும் அதா வது ஞான னிறைவுமாகிய உமக்கு னமஸ்காரம்.

ஓருய. சுவதந்நிர முடையவரும், தயையினு லாகிய தேவ வல்லப முடையவரும், சிவ வடிவமான வரும், பக்தர்களுக்குப் பரதந்நிரமுள்ளவரும், பவ்விய மானவர்களுக்குப் பவ்விய வடிவினரும்,

ஓருயக. விவேகிகளுக்கு விவேகமானவரும், ஆராய்ச்சியுள்ளோர்க்கு ஆராய்ச்சியுள்ளோரும், பிர காசமுள்ளவற்றிற்குப் பிரகாசமுள்ளவரும், ஞானி களுக்கு ஞானவடிவா யுள்ளவருமாகிய தங்களுக்கு, முன் னும் பக்கங்களிலும் பின்னும் மேலும் கீழும் னமஸ் காரஞ் ஞெய்தல் வேண்டும். எப்போதும் எனது சித்த வடிவமாகத் தங்களது ஆசனத்தை விதிப்பீராக.

ஓருயஉ. எவருடைய சன்னிதி மாத்திரத்தால் மனது சிதானந்தமய மாகின்றதோ, அத்தன்மைய பர மானந்தரும் ஆனந்த வல்லபருமாகிய ஸ்ரீ குருவாகிய தங்களை னமஸ்கரிக்கிறேன்.

ஓருயங. எவருடைய வாக்காகிய அமிர்த மானது ஸம்ஸார மென்னும் விஷத்தைக் கொல்லுகின்ற

தோ, அத் தன்மைய சகஜ ஆனந்தவடிவ குருவாகிய தங்களுக்கு னமஸ்காரம்.

ஓருயிச. பல பொருத்தமான உபதேசத்தால் சிஷ்ய சந்ததி இரக்ஷிக்கப்பெற்றதாகின்றது. கிருபை யின் சாரமான ஞானத்தால் அச்சுதமான, அதாவது னித்தியமான குருவின் சிற்பதம் பெறப்படுகின்றது.

ஓருயிரு. தனது இரமிப்பிற்காக, அதாவது பூரணசந்தோஷத்திற்காகக் கூறப்பெறும் பதத்தை விரும்புவோருக்கு, அச்சுதமான - அதாவது அழிவற்ற பதம் எவரால் தரப்பெற்றதோ அத்தன்மைய அச்சுத மும், பரமாத்மாவும், குருவுமாகிய தங்களுக்கு னமஸ் காரம்.

ஓருயிசு. அஞ்ஞானமாகிய இருளுக்குச் சூரி யனும், சிஷ்யனது சன்மார்க்கத்திற்குச் சமர்த்தரும், கிருபையாகிய அமுதத்திற்குச் சமுத்திரமும், அச்சுதமு மான குருவாகிய தங்களுக்கு னமஸ்காரம்.

ஓருயிள. சிஷ்யனது சம்ஸாரத்திலைக் கெடுத் தற்கு ஏதுவானவரும், பக்தர்களது னற் காரியத்திற்கு முன் னிற்கும் முக்கியமான சிங்கமும், சிற்சுக வடிவி னரும், அச்சுதருமா யிருக்கின்ற ஓங்கார வடிவ குரு வாகிய தங்களுக்கு னமஸ்காரம்.

ஓருயிஅ. குரு னமத்திற்குச் சமமான தெய்வமு மில்லை; பிதாவுமில்லை; பந்துக்களுமில்லை. குருனமத் திற்குச் சமமான சுவாமியுமில்லை. இத்தன்மைய பரம பதமு மில்லை.

ஓருயிக. ஏகாக்ஷரத்தைத் தருபவராகிய குரு வை எவன் மதிக்கவில்லையோ, அவன் சுவான (நாய்) யோனி னூற்றையடைந்து, சண்டாள யோனிகளிலும் பிறக்கின்றான்.

ஓசூம. குருவை விட்டு விலகுதலால் மரண முண்டாகும். குரு மந்திரத்தை விடுதலால் தரித்திரியத் தன்மை யுண்டாகும். குருவையும் மந்திரத்தையும் விட்டவன் இரௌரவாதி னரகத்தை யடைகிறான்.

ஓசூயக. சிவனது கோபத்தினின்றும் குரு இரட்சிக்கின்றார். குருவினது கோபத்தினின்றும் சிவன் இரட்சிப்பதில்லை. ஆதலால் சகல பிரயத்தி னத்திலும் சற்குருவின் ஆணையைக் கடக்கலாகாது.

ஓசூயஉ. ஸம்ஸார சமுத்திரத்தைக் கடப்பிக்கும் முக்கிய மந்திரமும், பிரம்மாதி தேவர்களாலும் முனிவ ராலும் பூஜிக்கப்பெற்ற சித்த மந்திரமும், தரித்திரிய துக்கத்தையும், பவரோகத்தையும் இல்லாமல் ஆக்கும் வல்லப மந்திரமுமாகிய மாரணம் என்ற மகாபயத்தைக் கெடுக்கும் குருராஜ மந்திரத்தை னமஸ்கரிக்கின்றேன்.

ஓசூயங. எழுகோடி மகாமந்திரங்களும் சித்த மயக்கத்திற்குக் காரணமானவை. குருவென்னும் இரண்டெழுத்துள்ள மந்திரமொன்றே சர்வத்திற்கும் மேலானதாம்.

ஓசூயச. இவ்விதமாகச் சொல்லி, மகாதேவர் பார்வதியைப் பார்த்து மறுபடியும் சொல்லலாயினர்.

கேள், தேவி! இதுதான் சுகத்தைத் தரும் மேலான பரம தத்துவம் என்றறி.

ஸுகஸுப்தி. தேவி! இப்படிச் சுருக்கமாய்க் குரு தத்துவம் யாவும் உனக்குச் சொல்லப்பெற்றது. இது அவ்யக்தமான (வெளிப்படாத) ரகஸியம். ஆதலால் இதைத் தகுதியில்லாத எவனுக்கும் சொல்லலாகாது.

ஸுகஸுப்தா. தேவி! என்னுடைய இந்த சத்தியஸ்வரூபமான வார்த்தை பொய்யாகாது. இப் பூமியின் மீது குரு கீதைக்குச் சமமான ஸ்தோத்திரம் இல்லவே இல்லை.

ஸுகஸுப்தி. ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திக்கும் இக் குரு கீதையை, தேவி! குரு தீக்ஷை யில்லாதவன் முன் ஒரு பொழுதும் படிக்கலாகாது.

ஸுகஸுப்தீ. மகேஸ்வரி! இது இரகசியம்; அத்தியந்த ரகசியம்; இது பாபிகளுக்குக் கிடைக்கத்தக்கதன்று. அனேக ஜன்மங்களிற் சம்பாதிக்கப்பெற்ற புண்ணியங்களின் பரிபாகத்தினல் மனிதன் குருவின் தத்துவத்தினைப் பெறுகின்றன்.

ஸுகஸுப்தே. எவரது பிரகாசத்தினல் 'யானே எல்லாம், என்னிடத்திற்குள்ளே யாவும் உள்ளன' என்றிவ்வாறு சத்தாகிய ஆத்ம வடிவமானது அறிவிக்கப் பெறுகிறதோ, அவரது பாத தாமரையைத் தினமும் பணிகின்றேன்.

ஓளவை. பிரபுவே! அஞ்ஞானமாகிய திமிரத்தால் குருடானவளும், விஷயத்தில் லிழுக்கப்பட்ட சித்தமுடையவளுமாகிய எனக்கு ஞானப் பிரபையைக் கொடுக்கும் தங்கள் திருவருள் பிரசாதத்தைச் சதா வழங்கும்படிப் பிரார்த்திக்கின்றேன்.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று

ஸ்ரீஸ்கந்தபுராணம் உத்தரகாண்டத்தில் சனத்குமார சம்ஹிதையின் மேற்பாகத்திலுள்ள உமாமகேசுவரர் சம்வாதமான ஸ்ரீ குருகீதை முற்றிற்று.

●

ஆதியே துணை

ஸ்ரீ குரு அஷ்டகம்

(ஆதி சங்கரர் அருளிச் செய்தது)

க. னல்ல அழகிய சரீரமும், புத்திரனும், களத்திரமும் (மனைவியும்), அழகிய கீர்த்தியும் (புகழும்), மேருவுக்குச் சமமாகிய பலவகைத் தனமு மிருந்து, மனதானது குரியின் (குருவின்) பாதகமலங்களில் பற்றவில்லையாயின், அதன்பின் என்ன (பயன்)? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன?

உ. முகத்தில் ஆறங்க முதலியவற்றோடு கூடிய வேதங்களும், சாஸ்திர வித்தையும், கவித்துவ முதலியனவு மிருக்கின்றன. கத்தியம் (வசனம்), னல்ல பத்தியம் (செய்யுள்) செய்கின்றன். (இவையிருந்தும்) குருவின் பாதகமலங்களில் மனம் பற்றவில்லையாயின்,

அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன?

ங. ஞ்ன் பிற தேசங்ஙளில் மதிக்கப்படுபவனுய், தன்தேசத்தில் தன்னியனுய் (பாக்கியசாலியாய்), சதாசார னடையினருள் எனக்குச் சமானன் வேறெருவரில்லாதவனு யிருக்கின்றேன். (இவ்வாறிருந்தும்) குருவின் பாதகமலங்ஙளில் என் மனம் பற்றவில்லேயாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன் பின் என்ன?

ச. பூமண்டலத்தில் இராஜராஜர்களின் கூட்டங்ஙளால் எவருடைய பாதாரவிந்தம் எப்போதும் சேவிக்கப் பெறுகிறதோ, (அவருக்கும்) தன் குருவின் பாதகமலங்ஙளில் மனம் பற்றவில்லேயாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன் பின் என்ன?

ரு. தானப் பிரதாபத்தால் என் கீர்த்தி பத்துத் திக்கிலும் சென்றிருக்கின்றது. (அப்படியிருந்தும்) எவருடைய பிரசாதத்தால் உலக வஸ்துக்கள் யாவும் கையிலிருப்பனவாயுளவோ, அத்தன்மைய குருவின் பாதகமலங்ஙளில் மனம் பற்றவில்லேயாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன் பின் என்ன?

கூ. என் சித்தம் போகத்திலில்லே; யோகத்திலில்லே; குதிரைக் கூட்டங்ஙளிலில்லே; ஸ்திரீ சுகத்திலுமில்லே; நிரவியங்ஙளிலுமில்லே. (அப்படியிருந்தும்)

குருவின் பாத கமலங்களில் என் மனம் பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன?

எ. காட்டில் அல்லது எனது வீட்டில் என் மனம் இல்லை; காரியத்திலில்லை; அல்லது தேகத்திலில்லை. (அப்படியிருந்தும்) எவரும் மதிக்கமுடியாத குருவின் பாதகமலங்களில் என் மனம் பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன?

அ. விலைமதிக்கப்படாத இரத்தினங்கள் அனுபவிக்கப்பட்டன. மனைவி முதலிய சுகங்கள் செவ்வையாய் அனுபவிக்கப்பட்டன. (அவ்வாறிருந்தும்) குருவின் பாதகமலங்களில் என்மனம் பற்றவில்லையாயின், அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன? அதன்பின் என்ன?

குருவின் அஷ்டகத்தை எந்தப் புண்ணிய தேகியாயுள்ள சன்னியாசி, அரசன், பிரஹ்மசாரி, கிருகஸ்தன் ஓதுகின்றாரோ, எவனுக்குக் குரு உபதேசித்த வாக்கியத்தில் மனது பற்றியிருக்கின்றதோ, அவன் (தான்) விரும்பிய பிரஹ்ம மென்னும் பெயரையுடைய பதத்தை யடைகின்றான்.

———— ❋ ————

கண்ணெதிர் காண லிற்குங் ஙாருண்யக் குருவை விட்டுக்
கண்ணுரு தரிய ஞாலாற் கணித்திடப் படுவ தொன்றை
எண்ணுறு மூடர் கையி லெய்துனீ ரொழுக விட்டு
விண்ணுறு மேக னீரை விரும்புன ரொப்பார் கண்மர்.